


**05.05.2025**

## தலைப்பு செய்திகள்

- நாட்டின் பாதுகாப்பு நிலவரம் குறித்து பிரதமர் திரு.நரேந்திரமோடியுடன் பாதுகாப்பு செயலர் திரு.ராஜேஷ் குமார் சிங் இன்று ஆலோசனை மேற்கொண்டுள்ளார்.
- வக்ஃப் சட்டத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை உச்சநீதிமன்றத்தில் இன்று பிற்பகல் நடைபெறுகிறது.
- தமிழ்நாட்டில் பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்த தின தமிழ் வார விழா கொண்டாட்டங்கள் இன்று நிறைவுபெற்றன.
- நீலகிரி கோவை தேனி திண்டுக்கல் தென்காசி கரூர் திருச்சி உள்ளிட்ட 11 மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத்தில் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - டெல்லி கேப்பிட்டல்ஸை இன்று எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

### பிரதமர்

நாட்டின் பாதுகாப்பு நிலவரம் குறித்து பிரதமர் திரு.நரேந்திரமோடியை பாதுகாப்பு செயலர் திரு.ராஜேஷ் குமார் சிங் இன்று புதுதில்லியில் பிரதமரின் இல்லத்தில் சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

விமானபடை தலைவர் ஏர்.சீஃப் மார்ஷல் **அமர்ப்ரீத் சிங்** நேற்று பிரதமரை சந்தித்து பேசியிருந்த நிலையில் கடற்படை தலைவர் அட்மிரல் தினேஷ் கே

திரிபாதி, ராணுவ தலைவர் ஜென்ரல் உபேந்திரா திவேதி உள்ளிட்டோரும் தனித்தனியே பிரதமரை சந்தித்து பேசியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலின் தொடர்ச்சியாக இந்த ஆலோசனைகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

***********

ராஜ்நாத்சிங்

இந்திய - ஜப்பான் பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்தியமைக்காக அந்நாட்டிற்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தமது நன்றியை உரித்தாக்கியுள்ளார்.

புதுதில்லியில் ஜப்பான் பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜென்ரல் நகடானியுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொண்ட அவர் பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்தில் இந்தியாவிற்கு ஜப்பான் அளித்த ஆதரவை எடுத்துரைத்தார்.

பிராந்திய, சர்வதேச பாதுகாப்பு நிலைமை குறித்து இரு தலைவர்களும் இன்று விவாதிப்பதோடு இரு நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்கின்றனர்.

முன்னதாக ஜென்ரல் நகடானிக்கு் முப்படைகளின் ராணுவ மரியாதை வழங்கப்பட்டது.

ஆசியான் பாதுகாப்பு அமைச்சர்களுக்கிடையே **லாவோ-PDR-இல்** கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்கு பின்னர் இரு நாட்டு பாதுகாப்பு அமைச்சர்களும் இரண்டாவது முறையாக இன்று மீண்டும் சந்தித்து ஆலோசனை மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே ஜம்மு காஷ்மீரின் குப்வாரா, பாரமுல்லா, பூஞ்ச், ரஜவ்ரி, மென்தர், நவ்ஷரா, சுந்தர்பானி, அக்னூர் பகுதிகளில் பாகிஸ்தான் துருப்புகள் நடத்திய துப்பாக்கி சூட்டிற்கு இந்திய ராணுவப்படையினர் தக்க பதிலடி வழங்கியுள்ளனர்.

***********

சுதான்ஷூ திரிவேதி

பஹல்காம் தாக்குதலுக்கு காரணமானவர்கள் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் என்று பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு.சுதான்ஷூ திரிவேதி கூறியுள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் எல்லையில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை பாகிஸ்தான் தொடர்ந்து மீறிவருவதாக குற்றம் சாட்டினார்.

அதேவேளையில் காங்கிரஸ் மற்றும் I.N.D.I.A கூட்டணி கட்சி தலைவர்கள் ராணுவத்திற்கு எதிராக அறிக்கைகளை வெளியிடுவதாகவும் குறை கூறினார்.

மத்திய அரசுடன் இருப்பதாக தெரிவித்துக்கொண்டே நாட்டிற்கு எதிராக அறிக்கைகளை காங்கிரஸ் வெளியிடுவதாக குற்றம் சாட்டினார்.

இத்தகைய அறிக்கைகள் ராணுவத்தின் மன உறுதியை குறைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

***********

**ஜே.பி.நட்டா**

பிஜேபி தேசிய தலைவர் திரு.ஜே.பி.நட்டா தலைமையில் கட்சியின் பொதுச்செயலாளர்கள் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

பிஜேபி தலைமையகத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் கட்சியின் பொதுச்செயலாளர்கள் பங்கேற்றனர்.

பீகார் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் சட்டப்பேரவை தேர்தல்கள் மற்றும் கூட்டணி குறித்து இதில் ஆலோசிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

***********

**பிஜேபி ஆர்பாட்டம்**

பஹல்காம் தீவிரவாத தாக்குதலை கண்டித்து பிஜேபி சார்பில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இன்று ஆர்பாட்டம் நடைபெற்றது.

நாமக்கல் காஞ்சிபுரம் தஞ்சாவூர் விருதுநகர் திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் நடைபெற்ற இந்த ஆர்பாட்டங்களில் பஹல்காம் தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகள் மற்றும் அவர்களுக்கு ஆதரவு அளிப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தி கட்சியினர் கோஷங்களை எழுப்பினர்.

***********

**வக்ஃப்**

வக்ஃப் சட்டத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை உச்சநீதிமன்றத்தில் இன்று எடுத்துக்கொள்ளப்படுகிறது.

தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா, நீதிபதிகள் சஞ்சய் குமார், கே.வி.விஸ்வநாதன் ஆகியோர் கொண்ட அமர்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு இம்மனுக்களின் மீது விசாரணை மேற்கொள்கிறது.

சென்ற மாதம் 17ஆம் தேதி நடைபெற்ற இதுதொடர்பான விசாரணையின்போது பூர்வாங்க விசாரணைகளுக்காக இன்றுவரை இவ்வழக்கை நீதிபதிகள் ஒத்திவைத்த நிலையில் தேவை ஏற்படின் இடைக்கால உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் என்றும் நீதிமன்றம் அன்றையதினம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த சட்ட திருத்தத்தால் முறையாக பதிவு செய்யப்பட்ட வக்.ஃ.ப் வாரியங்கள் பாதிக்கப்படாது என்றும், மத்திய வக்.ஃ.ப் கவுன்சில் மற்றும் மாநில வக்.ஃ.ப் வாரியங்களில் எந்த நியமனமும் செய்யப்படாது என்றும் மத்திய அரசு கடந்த விசாரணையின் போது உறுதியளித்திருந்தது.

***********

**முதலமைச்சர்**

தமிழ்நாட்டில் பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்த தினத்தை ஒட்டிய தமிழ் வார விழா இன்று நிறைவடைந்தது.

சென்னையில் நடைபெற்ற நிறைவு நிகழ்ச்சியில் பங்கேற்ற முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சிறந்த 5 தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளை நாட்டுடமையாக்கி அவர்களுக்கு பரிசு தொகையை வழங்கினார்.

இந்நிகழ்வில் பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்த நாளை ஒட்டி நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

***********

**மா.சுப்பிரமணியன்**

தமிழ்நாட்டில் மருத்துவக்கல்வி மட்டுமல்லாமல் சட்டக்கல்வி, பொறியியல் துறையிலும் அரசு பள்ளி மாணாக்கருக்கான ஏழரை சதவிகித உள் ஒதுக்கீடு வழங்கப்படுவதால் ஏழை கிராமப்புற மாணாக்கர் பயன்பெற்று வருவதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இளநிலை மருத்துவ படிப்பிற்கான நீட் நுழைவு தேர்வின்போது அளவுக்கு மீறிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதாக குறை கூறினார்.

***********

**கோவி செழியன்**

தமிழ்நாட்டில் பொறியியல் படிப்பு கலந்தாய்விற்கான விண்ணப்ப பதிவு நாளை மறுநாள் தொடங்குகிறது.

மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோவி.செழியன் பொறியியல் படிப்பிற்கான ஆன்லைன் விண்ணப்ப பதிவை நாளைமறுநாள் தொடங்கிவைக்கிறார்.

***********

**எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**

தர்மபுரி பேருந்து நிலையத்தில் புதிய வழிதடங்களில் பேருந்து சேவைகளை மாநில வேளாண் அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் இன்று கொடியசைத்து துவக்கிவைத்தார்.

இதன்மூலம் 76 கிராமங்களில் உள்ள பள்ளி கல்லூரி மாணாக்கர் மற்றும் பொதுமக்கள் என 60 ஆயிரம் பேர் பயன்பெறுவர்.

பென்னாகரம், ஓசூர்நகர், சேலம் ஹஸ்தம்பட்டி கிளைகளில் குளிருட்டப்பட்ட ஓய்வறைகளை அமைச்சர் துவக்கிவைத்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சதீஸ் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

***********

**நெல்**

செங்கல்பட்டு மாவட்டத்தில் பெய்த கனமழையால் நெல்கொள்முதல் நிலையத்தில் மூடிவைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் மழையில் நனைந்து சேதமடைந்தன.

அறுவடை முடிந்து தயாராக வைக்கப்பட்டிருந்த இந்த நெல் மழையில் நனைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

***********

**அஇஅதிமுக ஆர்பாட்டம்**

ஈரோடு மாவட்டம் சிவகிரி விளக்கேத்தி நான்குசாலை சந்திப்பு பகுதிகளில் அஇஅதிமுகவினர் இன்று மாநிலத்தின் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அண்மையில் சிவகிரி பகுதியில் நடைபெற்ற இரட்டை கொலை சம்பவ குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய வலியுறுத்தி இந்த ஆர்பாட்டம் நடைபெற்றது.

***********

நாகை

இலங்கை கடற்கொள்ளையர்கள் தாக்குதல் சம்பவத்தை கண்டித்து நாகை மாவட்டம் செருதூர் மற்றும் வெள்ளபாக்கம் பகுதி மீனவர்கள் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் 500க்கும் மேற்பட்ட ஃபைபர் படகுகள் கடலுக்குள் செல்லாமல் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

இருவரி

**ராணிப்பேட்டை மாவட்ட ஊரக நகர** பகுதிகளின் புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியலை ஆட்சித்தலைவர் டாக்டர் சந்திரகலா இன்று வெளியிட்டார்.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் இன்று நடைபெற்ற** திருநங்கைகளுக்கான சிறப்பு குறைதீர் நாள் கூட்டத்தில் கோரிக்கை மனுக்களை ஆட்சித்தலைவர் திருமதி அருணா பெற்றுக்கொண்டார்.

***********

ரயில்

திண்டுக்கல் - நாகர்கோவில் இடையே முன்பதிவில்லா சிறப்பு ரயில் இன்றுமுதல் வரும் 31-ம் தேதிவரை இயக்கப்படுகிறது.

புதன் மற்றும் வியாழக்கிழமை நீங்கலாக ஏனைய நாட்களில் இயக்கப்படும் இந்த ரயில் திண்டுக்கல்லிலிருந்து பிற்பகல் 3.45க்கு புறப்பட்டு இரவு 9.05க்கு நாகர்கோவில் சென்றடையும்.

***********

**கொள்ளை**

சென்னை வட பழனியில் 20 கோடி ரூபாய் மதிப்பிலான வைரங்கள் கொள்ளையடித்த சம்பவம் தொடர்பாக தூத்துக்குடி புதூர்பாண்டியாபுரம் சுங்கச்சாவடி அருகே நான்குபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னையிலிருந்து துணை ஆணையர் தலைமையில் செயல்படும் தனி காவல் படையினர் இவர்களை கைது செய்ததுடன் கொள்ளையடிக்கப்பட்ட வைரம் மற்றும் காரை பறிமுதல் செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் விசாரணை நடைபெறுகிறது.

***********

**ஒகேனக்கல்**

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் தொடர்மழை காரணமாக ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு 5 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் ஒகேனக்கலுக்கு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***********

**வானிலை**

வளிமண்டல கீழடுக்கு பகுதிகளில் கிழக்கு மேற்கு திசை காற்று சந்திக்கும் பகுதி நிலவுவதால் நீலகிரி கோவை திருப்பூர் தேனி திண்டுக்கல் தென்காசி கரூர் திருச்சி அரியலூர் பெரம்பலூர் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் இன்று கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நீலகிரி தேனி திண்டுக்கல் மாவட்டங்களில நாளை கன மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

***********

**கிரிக்கெட்**

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத்தில் இன்றிரவு ஏழரை மணிக்கு சன்ரைசர்ஸ் ஹைதராபாத் - டெல்லி கேப்பிட்டல்ஸை எதிர்கொள்கிறது.

***********

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**